//மிக அவசரம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 669 /ஆ4/ 2022 நாள். .07. 2022**

**பொருள் :** பள்ளிக்கல்வி – தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர் திறனாய்வுத் தேர்வு பிப்ரவரி–2022 (TRUST EXAM ) 2021–2022–ம் கல்வியாண்டிற்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டமை –தமிழ்நாடு ஊரக திறனாய்வுத் தேர்வில் 2018–2019 முதல் 2021–2022 வரை தேர்ச்சி பெற்று தற்போது 9,10,11,12 வகுப்பில் பயின்று வரும் தகுதியுள்ள மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வங்கி காசோலையாக வழங்குதல் –சார்பு

**பார்வை :** தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணி திட்டம்) செயல்முறை கடித எண் ந.க.எண்.022230 /எம்/இ4/2022 நாள் .22.03..2022

––––

பார்வையின் காணும் பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணி திட்டம்) தமிழ்நாடு தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர்களுக்கான திறனாய்வுத் தேர்வில் 2018–2019 முதல் 2021–2022 வரை தேர்ச்சி பெற்று தற்போது இணைப்பில் காணும் பள்ளிகளில் பயின்று வரும் 9,10,11,12 வகுப்பு மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை வங்கி காசோலை 13.07.2022 அன்றுக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக B4 பிரிவு எழுத்தரிடம் பெற்றுக்கொள்ள சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

மேலும் பெற்றுச் செல்லும் காசோலையினை சார்ந்த மாணவ /மாணவியருக்கு வழங்கி விட்டு இத்துடன் இணைக்கபட்டுள்ள பற்றொப்ப பதிவேடு இரசீது மூன்று நகல்களில் அசல் கையொப்பம் பெற்று மீள இவ்வலுவலகத்தில் 18.07.2022 அன்றுக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக B4 பிரிவு எழுத்தரிடம் ஒப்படைக்க சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் .

2021–2022ம் கல்வியாண்டில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தற்போது 2022–2023ம் இக்கல்வியாண்டில் பள்ளியில் பயில்கிறார்கள் என சான்று வழங்கிய பள்ளி தலைமை ஆசிரியர்கள் மட்டும் காசோலையினை பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சான்று வழங்காத பள்ளிதலைமை ஆசிரியர்கள் சான்று வழங்கிவிட்டு அன்றே காசோலை பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்) க. முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

இணைப்பு : மாதிரி படிவம் பற்றொப்ப இரசீது

# வேலூர் மாவட்டம்
# ஊரகத் திறனாய்வுத் தேர்வு
# பற்றொப்ப இரசீது

_______________ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்வில் தேர்ச்சி பெற்று தற்போது _________ வகுப்பில் பயின்று வரும் செல்வன் /செல்வி ______________________________பதிவு எண் __________________ 2021–2022–ம் கல்வியாண்டில் ரூ.1000/–(ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும் ) காசோலை எண் _________________ முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெற்றுக் கொண்டேன் .

மாணவர் கையொப்பம்

மாவட்டத்தின் பெயர் =

கல்வி மாவட்டத்தின் பெயர் =

தற்போது படிக்கும் பள்ளி முகவரி விவரம் =

பள்ளி தலைமை ஆசிரியர் கையொப்பம் =
(பள்ளி முத்திரையுடன் )

முதன்மைக் கல்வி அலுவலர் கையொப்பம் =
(அலுவலக முத்திரையுடன் )
மேலொப்பம்